## பத்திரிக்கை செய்தி

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் போக்குவரத்து காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.V.பதி அவர்கள் கர்நாடகாவில் இருந்து பண்ணாரி வழியாக கல் லோடு ஏற்றி வரும் லாரிகளை தொந்தரவு செய்யாமல் ஹாசனூர் முதல் சத்தியமங்கலம் சாலையை கடந்து செல்ல அனுமதிக்க மாமூலாக லாரி டிரைவர் மற்றும் அதன் உரிமையாளர்களை மிரட்டி நேரடியாகவும், அவர் ஓட்டுநராக வைத்திருந்த திரு.மனோஜ்குமார் என்கிற ஊர்க்காவல் படை (Home Guard) காவலர் மூலமும் லஞ்சம் பெறுகின்றார் என்று ஈரோடு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன்பேரில், 8.1.19 அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் பண்ணாரியிலிருந்து சத்தி செல்லும் சாலையில் ஆர்டிஓ அலுவலகம் எதிரில் மேற்படி அலுவலர்கள் பணம் வசூல் செய்து கொண்டிருந்தபோது லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசார் திடீர் தணிக்கை மேற்கொண்டார்கள். அப்போது காவல் ஆய்வாளர் திரு.V.பதி மற்றும் ஊர்க்காவல் படையை சேர்ந்த திரு.M.மனோஜ்குமார் ஆகியோர்கள் காவல் ஆய்வாளருக்கு சொந்தமான TN 33 BL 8204 என்ற ஐ-20 குண்டாய் வாகனத்தில் வசூல் செய்து வைத்திருந்த ரூ.40,000/- லஞ்சத் தொகையுடன் தப்பிச்சென்றுள்ளார்கள். அப்போது விஜிலன்ஸ் போலீசார் அவர்களை மடக்கி பிடிக்க முற்பட்டபோது ரூ.40,000/- லஞ்சத் தொகையை மட்டும் காரை விட்டு வெளியே ரோட்டில் வீசிவிட்டு விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தப்பிச் சென்றுள்ளார்கள். இது தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.